(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 1971-72 நிதி ஆண்டின் திருத்திய வரவு-செலவு திட்டத்தில் பல்லடத்தில் துணைக் கருவூலம் ஒன்றை திறப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: அந்தப் பகுதி ஒரு வியாபார ஸ்தலமாக இருப்பதனாலும், அந்தப் பகுதியில் பஞ்சாயத்துயூனியன் சுல்தான்பேட்டை, பங்களூர் போன்ற இடங்களில் உள்ளவர்கள் அது மிகவும் தேவை என்று கருது வதனாலும் அதை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதனால்தான் 1971-72-ஆம் நிதி ஆண்டிலேயே பல்லடத்தில் ஒரு துணைக் கருவூலம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன்.

Demonstration by students of Annamalai University

* 210 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there was a students' demonstration in the Annamalai University about the 3rd February, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இது பொறையூரில் நடைபெற்ற குடியுரிமை பயிற்சிக் கூடத்தில் ஒரு மாணவியிடம் ஒரு விரிவுரையாளர் தகாத முறையில் நடந்தார் என்ற குற்றத்திற்காக அவரை வேலை நீக்கம் செய்வது பற்றி போராட்டம் நடந்தது. பல்கலைக்கழக அதிகாரிகள் விரிவுரையாளரை பணியிலிருந்து நீக்கினர். பின்பு இந்த ஆணை ரத்து செய்யப்பட்டது.

Sandwich courses of study in Engineering

* 211 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to introduce Sandwich courses of study in the Engineering colleges in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இப்பயிற்சிப் பிரிவுகளை எந்த எந்த பாடங்களில், எந்த எந்த தொழில் நுட்ப நிறுவனங்களில் ஆரம்பிக்கலாம் என பரிசீலிக்க குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

நகராட்சி, மாநகராட்சித் தலைவர்கள் தேர்தல்

■ 212 வினா—திரு. கே. ஏ. வகாப்:
திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முனிசிபாலிடி, கார்பரேஷன் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் திட்டம் ஏதும் அரசிடம் உண்டா?